தனி இதழ் ஒரு அணா
இலங்கையில் 10 சதம்

மலர் 1] [இதழ் 145

நம் நாடு

தி.மு.க. தின இதழ் — ஆசிரியர்: அண்ணாதுரை

சந்தா விபரம்
உள்நாடு (இலங்கை உட்பட)
ஆண்டு ரூ. 24—0—0
6 மாதம் ரூ. 12—0—0
3 மாதம் ரூ. 6—0—0
வெளிநாடு:
ஆண்டு ரூ. 30—0—0
6 மாதம் ரூ. 15—0—0
3 மாதம் ரூ. 7—8—0

"THE NAM NADU" A TAMIL DAILY : THE OFFICIAL ORGAN OF: THE D.P.F.

சென்னை : கார்த்திகை 15உ திங்கள் (30—11—53) ☆ ☆ ☆ வெளியீடு : கார்த்திகை 16உ செவ்வாய் (1—12—53)

சென்னை சிறைக் கதவுகள் திறந்தன

புன்னகை பூத்த முகத்துடன் கூப்பியவண்ணம் பொதுச் செயலாளர் முன்வர மற்றவர் நிழல்போல் பின் வந்தனர்

—(0)—



எழுஞாயிறு போன்ற ஏந்தல்களைப் பாராட்டி மகிழ்ந்தனர் மக்கள்

சென்னை, நவ. 30—

தி. மு. கழகப் பொதுச் செயலாளர் அண்ணாதுரை, தோழர்கள் நெடுஞ்செழியன், சம்பத், நடராசன் ஆகிய நால்வரும் 3-மாத கால சிறை வாழ்வுக்குப் பிறகு இன்று விடுதலை செய்யப்பட்டனர். முன்னரே நாம் குறிப்பிட்டிருந்தபடி தோழர் மதியழகன் விடுதலை செய்யப்படவில்லை. அவர் 10—12—53-ல், விடுதலை செய்யப்படுவார்.

தலைவர்கள் ஐவர் மீதும் இந்தியன் பினல் கோட் 117, 341 ஆகிய பிரிவுகளின் படியும், ரயில்வே சட்டம் 108, 128 பிரிவுகளின்படியும் சர்க்கார் தொடுத்திருந்த வழக்கில், செப். 1-ந் தேதியன்று, எழும்பூர் பிரதம மாகாண மாஜிஸ்திரேட் திரு வெங்கட்ராமண நாயுடு, மேற்படி பிரிவுகளின்கீழ், கோர்ட் கலையும்வரை காவல் தண்டனையும், தலா ரூ. 500 அபராதமும், தவறினால் 3 மாத சிறை தண்டனையும் விதித்தார். அபராதம் கட்ட மறுத்து, தலைவர்கள் சிறை புகுந்தது எல்லோருக்கும் நினைவிருக்கும்.

மக்கள் வெள்ளத்தைத் தடை செய்ய முடியாதென்பதால் அதிகாலையிலேயே, தலைவர்கள் விடுவிக்கப்படலாம் என்றறிந்த சென்னை மக்கள், கழகக் கொடிகளுடனும், மலர் மாலைகளுடனும் காலை நாலு மணியிலிருந்தே சிறைவாயிலில் கூட ஆரம்பித்துவிட்டனர்.

காலைக்கதிரவனின் முதல் ஒளிக்கற்றை சிறைச் சுவர்களை முட்டிச் சிதற ஆரம்பித்தது. சிறை அதிகாரியும் வந்தார். சிறிது நேரத்தில் சிறைக்கோட்டம், விழுங்கியிருந்த வீரர்கள் நால்வரையும் அவர்தம் ஆடை அணிகளையும் தன் கபாடங்களைத் திறந்து உமிழ்ந்தது.

திராவிடரின் லட்சிய கீதமும், தலைவர்கள் வாழ்க என்ற வாழ்த்தொலிகளும், காலைக் காற்றில் மிதந்து கொண்டு மேகமண்டலத்தில் மோதி எதிரொலித்தன.

புன்னகைபூத்த முகத்துடன் கைகூப்பிய வண்ணம் தலைவர்கள் நால்வரும் வெளிவந்தனர். சிறைவாயிலில் காத்திருந்த பல்லாயிரவர் சார்பாக தி. மு. கழக பொருளாளர் தோழர் ஏ. கோவிந்தசாமி எம். எல். ஏ. அவர்கள் மலர் மாலைகள் அணிவித்தார்.

கடிப்புப் புலவர் கே. ஆர். ராமசாமி, கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன், புரட்சி நடிகர் எம். ஜி. ராமச்சந்திரன், தி. மு. கழக முன்னணி வீரர்கள் காஞ்சி கல்யாணசுந்தரம், கே. எம். கண்ணபிரான், மு. கருணாநிதி, அ. பொன்னம்பலனார், என். எஸ். இளங்கோ, போளூர் சுப்ரமணியம், சி. வி. எம். அண்ணாமலை, மதுரை எஸ். முத்து, நடிகமணி நாரா

(3-ம் பக்கம் பார்க்கவும்)

இளவல் கருணாநிதிக்கு சென்னையின் இதயங்கனிந்த வரவேற்பு

—(✶)—

விழிக்கு எட்டிய மட்டும் வெள்ளம்போல் திராவிடர் கூட்டம்

சென்னை, நவ. 30—

கல்லக்குடி அறப்போராட்ட தலைவர் தோழர் மு. கருணாநிதி அவர்களை வரவேற்க ஒரு மாபெரும் ஊர்வலமும், பாராட்டுக் கூட்டமும், நேற்று இங்கு நடைபெற்றது. எழும்பூர் இரயில்வே நிலையத்தின் உள்ளும், வெளியும் பத்தாயிரம் பேர், பகல் ஒரு மணிக்கே வந்து குழுமிவிட்டனர். சென்னை மாவட்ட திராவிட முன்னேற்றக் கழகக் கிளைகள், தங்கள் தங்கள் கொடிகளுடன் ஊர்வலத்தில் கலந்து கொண்டன.

சரியாக 3-மணிக்கு தோழர் கருணாநிதி, தனுஷ்கோடி பாசஞ்சரில் எழும்பூர் நிலையம் வந்து இறங்கினார். "கருணாநிதி வாழ்க!" "ஐவர் வாழ்க!" "தூத்துக்குடி சதிவழக்கை வாபஸ் வாங்கு" "டால்மியாபுரத்தை கல்லக்குடியாக்கு" என பேரொலிகள் கிளப்பினர்.

பொருப்பாளர் தோழர் ஏ. கோவிந்தசாமி, எம். எல். ஏ., புரட்சி நடிகர் எம். ஜி. ராமச்சந்திரன், மதுரை எஸ். முத்து, எஸ்.எஸ்.பி. லிங்கம் ஆகியோரும், சென்னை மாவட்ட சார்பில் தோழர் கே. எம். கண்ணபிரானும் தோழர் கருணாநிதிக்கு மாலை சூட்டி வரவேற்றனர்.

தோழர்கள் கே. கே. நீலமேகம், அ. பொன்னம்பலனார், என். எஸ். இளங்கோ, கா. அப்பாதுரை, பாராங்குசம், டி. வி. நாராயணசாமி, ஏ. எல். சஞ்சீவி, அம்பில் தருமலிங்கம், தில்லை வில்லாளன், அரங்கண்ணல், சுப்ரமணியம். தோழியர்கள்: அமிர்தம் அப்பாதுரை, கே. பி. எஸ். சுகுணாம்பாள், மேயூர் ஆயிரக்கணக்கான தாய்மார்களும் பல மாவட்ட இயக்கத் தோழர்களும் வரவேற்பில் கலந்துகொண்டனர்.

ஊர்வலம், திறந்த காரில், 3-30 மணிக்கு ரயிலடியிலிருந்து துவங்கியது. இருவண்ணக் கொடிகள் ஏராளமாக முன்செல்ல 50 000-க்கு மேற்பட்ட மக்கள் குழுமியதால், ஏறக்குறைய ஒரு மணி நேரத்துக்குப் போக்குவரத்து தடைப்பட்டது. வழி நெடுக, தோரணங்களும், 'வருக! கருணாநிதி!' என்ற வாழ்த்து வளைவுகளும் கட்டப்பட்டிருந்தன. அதிர்வேட்டுகள் அடிக்கடி முழக்கப்பட்டன. ஊர்வலம், எழும்பூர் பெரியசாலை வழியாக சென்று, சிந்தாதிரிப்பேட்டையைக் கடந்து, பின் மவுண்ட்ரோட் வழியாகவும், புதுப்பேட்டை வழியாகவும் வந்து, எழும்பூர் பொதுக்கூட்டத் திடலை மாலை 6 மணிக்கு வந்தடைந்தது.

சென்னை மாவட்ட தி. மு. கழகத்தின் சார்பில் அழகின் திடலில் மாபெரும் பாராட்டுக் கூட்டம்



நடைபெற்றது.

தோழர் காஞ்சி கே. வி. முருகேசன், வி. கஸ்தூரி ஆகியோர் இயக்கப் பண் பாடினர்.

சென்னை மாவட்ட தி. மு. கழகச் செயலாளர் தோழர் கே. எம். கண்ணபிரான், தோழர் ஏ. கோவிந்தசாமி, எம். எல். ஏ. அவர்களைத் தலைமை தாங்கும்படி மொழிய, தோழர் டி. இராவணன் வழிமொழிந்தார். தோழர் ஏ. கோவிந்தசாமி அவர்கள் பாராட்டுக் கூட்டத்திற்குத் தலைமை தாங்கினார்.

தலைவர், தம் முன்னுரையில், "தோழர் கருணாநிதியின் இந்த வரவேற்புக் கூட்டம், திராவிடர் திருநாளென்றும், தாய்மார்கள் தங்கள் மகனை வரவேற்பது போல—தோழர் கருணாநிதியை, இன்று எண்ணற்ற தாய்மார்கள் அன்புமுகம் காட்டி வரவேற்கின்றனர்" என்று குறிப்பிட்டார்.

அடுத்தது தோழர்கள் கே. கே. நீலமேகம், க. அன்பழகன், டி. சண்முகம் எம். எல். ஏ., கே. ஆர். ராமசாமி, டி. வி. நாராயணசாமி, அ. பொன்னம்பலனார், ஈ. வெ. கி. சம்பத், எம். ஜி. ராமச்சந்திரன், மதுரை முத்து, தர்மலிங்கம், சுப்ரமணியன் ஆகியோர் கருணாநிதியைப் பாராட்டிப் பேசினர்.

(8-ம் பக்கம் பார்க்க)

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர்: அண்ணதுரை

சென்னை 30—11—1953 திங்கள்

மட்டைக்கு இரண்டு கீற்று!

புதிய கல்வித் திட்டத்தைக் குறித்து, விசாரணை செய்து, திட்டத்தின் நன்மை தீமைகளை ஆராய்ந்து அறிந்து கூற வேண்டி, பாருலேகர் அவர்கள் தலைமையில் ஒரு விசாரணைக் குழுவை அமைச்சர் ஆச்சாரியார் வேண்டா வெறுப்பாக நியமித்தார். கட்டிக் கொடுத்தச் சோறு போல, எந்தக் கோணத்திலிருந்து திட்டத்தை ஆராயவேண்டும் என்பதற்கு எல்லையை, குழு நியமனக் கட்டளையிலேயே அமைச்சர் ஆச்சாரியார் குறிப்பிட்டுவிட்டார். அதாவது,

(1) "சென்ற ஆண்டுவரை சென்னை மாநிலத்தில் இருந்த கல்வி முறையை ஆராயவேண்டியது, அந்தக் கல்வி முறையில் தரத்தையும் படிக்கும் பிள்ளைகளின் தொகையையும் எப்படி உயர்த்தலாம் என்பதில் கருத்துச் செலுத்த வேண்டியது."

(2) "மேலே குறிப்பிட்டுள்ள நோக்கம் நிறைவேற புதுக் கல்வித் திட்டம் எந்த அளவு பயன்படும் என்பதை ஆராய்ந்து, தகுந்த சிபார்சுகளை சர்க்காருக்குச் செய்ய வேண்டியது" என்பதாகும்.

ஒரே திசையில் செல்ல குதிரையின் கண்களுக்குப் பட்டை போட்டு மறைப்பது போல, அமைச்சர் ஆச்சாரியாரும், விசாரணைக் குழுவும், தமக்குச் சாதகமான முடிவாகக் கூற, முன் கூட்டியே திட்டமிட்டு, விசாரணைக் குழுவின் ஆராய்ச்சிக் கரங்களை வலிவாகக் கட்டிப்போட்டு விட்டார். எனவே, விசாரணைக் குழுவின் முடிவு வேறு போக்கில் உருவாகாது என்பது முன்னரே முடிந்த முடிவாகும். ஆதலாலே, குழுவின் முடிவு நமக்குத் திகைப்பையோ, ஆச்சரியத்தையோ உண்டாக்கவில்லை எதிர்பார்த்தது கிடைத்து விட்டது என்ற ஒரே நிலைதான் நமக்கு.

குழுவின் தலைவரும், மற்ற இரு உறுப்பினர்களும் நாட்டு நடைமுறை அறியாதவர்கள். நாட்டு நடைமுறை தெரிந்த மூன்றுங் கல்வித்துறைத் தலைவரோ, 'எஜமான் சொல்படி' நடக்கக் கடமைப்பட்டு இருப்பவர். தனது ஆராய்ச்சியில் சரி என்று பட்டதை எடுத்துக் கூறும் உரிமையும், துணிவும் அவருக்குத் துளியும் கிடையாது.

இந்திய அரசியல் சட்டத்தில், பத்து ஆண்டுகளுக்குள்ளாக நாட்டில் கல்வி பெறும் பருவமடைந்த சிறுர்கள் அனைவரையும், கல்வி பெற்றவர்களாக இருக்கப் பார்த்துக் கொள்ள வேண்டும் என்று நல் நோக்குத் துறையில் கூறப்பட்டிருப்பதே, விசாரணைக் குழுவினர் மூளையைத் தொற்று நோய் போல் பற்றிக்கொண்டு இருக்கிறது.

இந்த நல்நோக்கிற்கு தங்களுடைய அறிவை அடகு வைத்துவிட்ட காரணத்தால், குழுவினர், கல்விக் கண் கொண்டு, எட்டளவில பகட்டாக விளங்குகிற புதிய கல்வித் திட்டத்தை ஆராய்ந்து பார்க்கத் தவறிவிட்டனர் என்பது மிகைப்படக் கூறியதாகாது.

கல்வி நிபுணர் குழுவைக் கொண்டு ஒரு திட்டத்தைத் தயாரித்து, அந்தத் திட்டத்தை நடைமுறைக்குக் கொண்டு வரவேண்டும் என்று சர்க்கார் சார்பில் முதல் முதலாக ஒரு அமைச்சரை சொல்லச் செய்து, அந்த ஏற்பாட்டைத் தாம் எதிர்ப்பதாகக் கூறி இருந்தால், தனது திட்டத்தை இப்பொழுது எதிர்ப்பவர்கள, அந்த ஏற்பாட்டை உடனே அமுல் செய்யவேண்டும் என்று முயலத் தக்கிளர்ச்சி செய்வார்கள்; அப்பொழுது புதிய கல்வித் திட்டத்தைச் சுலபமாக அமுலுக்குக் கொண்டு வந்திருக்கலாம்; என்று, அமைச்சர் ஆச்சாரியார் ஒருமுறை, தனது திட்டத்திற்கு எழுந்த எதிர்ப்பின் தன்மையையும், எதிர்ப்பாளர்களின் சிறப்பையும் உணர்ந்துகொள்ளும் ஆற்றல் இல்லாமல் உளறிக்கொட்டி இருக்கிறார். இதில மறைந்து கிடக்கும் உண்மையை மெய்ப்பிப்பதற்குத்தான், அமைச்சர் ஆச்சாரியார், விசாரணைக் குழுவென்று, உள்நாட்டு கல்வித் துறையினரை எல்லாம் ஒதுக்கிவிட்டு, நாட்டு வளப்பம் துளியும் தெரியாத, மொழிவழி புரியாத வெளி மாநிலத்துக்காரர்களாகப் பார்த்து நியமித்தார்.

அமைச்சர் ஆச்சாரியாரின் உள்ளக் கிடக்கையை, அப்படியே விசாரணைக் குழு, உணர்ச்சிக்கு உணர்ச்சி சொல்லோவியமாகத் தீட்டித் தந்து இருக்கிறது. பல நாட்டு வழக்கில் உள்ள கல்வி முறைகளைத் தாங்களும் கற்றிருக்கிறோம் என்பதைக் காட்டிக் கொள்ளும் வகையில், பல எடுத்துக்காட்டுகளை குழு நிபுணர்கள் கூறி, அமைச்சர் ஆச்சாரியார் திட்டத்திற்கு ஆதரவு தேடும் வழக்கறிஞர் வாதத்தில் ஈடுபட்டு இருக்கிறார்கள்!

குறைந்த செலவில பள்ளி செல்லும் பருவமடைந்த சிறுர்களின், எண்ணிக்கையை மேலும் பெருக்க, இந்தத் திட்டம் பெருதவி செய்யும் என்ற ஆச்சாரியார் சர்க்கார் வாதமும், இத்துறையில் கணிசமான பலன் விளையும் என்று 'ஆமாம்' கூறும் விசாரணைக் குழுவின் முடிவு மட்டுமே, இந்த வகையில் எதிர்பார்க்கப்படும் விளைவை நிச்சயமாக உண்டாக்கும் என்று எவரும் நம்பிவிட முடியாது.

உயர்நிலைப் பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் இடம் கிடைக்காமல் ஒவ்வொரு ஆண்டும் மாணவர்கள் ஏமாற்றமடைகின்றனர், ஒரு கேவலநிலை நமது கிராமத் தொடக்கப் பள்ளிகளில் அறவே இல்லை என்பது வெளிப்படை. கிராமத்தில் உள்ள அனைவரும், வயது வந்தத் தங்கள் சிறுவர்கள் எல்லோரையும் கல்வி கற்றவர்களாக ஆக்கவேண்டும் என்ற சாதாரண நினைப்புகூட இப்பொழுதும் கொண்டிருக்கவில்லை என்பது மறக்க முடியாத உண்மையாகும், கல்வி பெறுவதின் மேன்மையை இன்றும் கிராம மக்களில் பெரும்பான்மையோர் உணர்ந்திருக்கவில்லை என்ற உண்மையை, விசாரணைக் குழு கருதினதாகவே தெரியவில்லை.

இந்த மக்கள் மனவளத்தை நிபுணர்குழு நினைத்துப் பார்த்திருந்தால், புதிய கல்வித் திட்டத்தின் குறைந்த கால கல்வி போதனையை வானளாவப் புகழ்ந்து கூற முன்வந்து இருக்காது. புதிய திட்டத்தின்படி குறைந்த கால போதனையின் விளைவாக, ஏற்கனவே கல்வியின் உயர்வை மறந்து வாழும் மக்களிடம், மேலும் கல்வியைக் குறித்து மட்டமாகவே நினைக்கும் பயங்கரமான நிலை ஏற்படும் என்பதை உணர்ந்துகொள்ளும் ஒரு வாய்ப்பு, விசாரணைக் குழுவிற்கு உண்டாகி இருக்கும். விசாரணைக் குழுவின் முடிவு குறித்து எந்தக் குறையை எடுத்துக் காட்டித்தான், என்ன பயன் விளையப்போகிறது?

குறைந்த செலவில் பலருக்குக் கல்வி என்றதையும், செலவில்லாமல் பிற்பகலில் தொழிற் கல்விப்பயிற்சி அல்லது அத்துறையில் சிறுவர்களுக்கு ஆர்வமூட்டுவது என்ற ஆச்சாரியாரின் ஆகாயக் கோட்டையையும், நிபுணர் குழு சுக்கு நூறாக்கி இருக்கிறது. அதையும் முகத்துக்கு நேராக சுட்டிக் காட்டக் குழுவிற்குத் துணிவு இருப்பதாகத் தெரியவில்லை. சுற்றிவளைத்துப் பேசுகிறது! குழு முடிவு பற்றி விரிவாக எழுதவேண்டும்.

புதிய கல்வித் திட்டத்திற்கு ஆச்சாரியார், அமைச்சர் என்ற முறையில் கூறியதையேதான், விசாரணைக் குழுவும் 'மட்டைக்கு இரண்டு கீற்று' என்று உறுதிப் படுத்துகிறது எனவே, குழுவின் முடிவு, கல்வித் திட்டத்தின்மீது நாம் கொண்டிருந்தக் கருத்தை மாற்றிக் கொள்வதற்குத் துணை நிற்கவில்லை. 'ஓட்டைக் கூத்தன் பாட்டுக்கு இரட்டைத் தாழ்ப்பாள்' என்பது போலத்தான் நிலைமை இருக்கிறது.

"இலங்கை — நம் வீட்டின் குறடு"

"நம் நாடு — அதன் தாழ்வாரம்"

"முதலில் தமிழ் எங்கு தோன்றினாலென்ன? இலங்கை வேறு நாடு, தமிழகம் வேறு நாடல்ல; எல்லாம் ஒரே நாடு. இலங்கை நம் வீட்டின் குறடு. நமது நாடு இலங்கையின் தாழ்வாரம்."

"தனித் தமிழ் நாடு என்று பேசிக்கொள்கிறவர்களெல்லாம், தங்கள் கட்சியின் சின்னமாக 'வில், கயல், புலி'யை பொறித்திருக்கிறார்கள். இந்த முரண்பாடுகூடத் தெரியாது, அறியாமையில் மூழ்கிக்கிடப்பவர்களுக்காக நான் பரிதாபப்படுகிறேன்,"

என்று, பாரதிதாசன், நேற்று மாலை மயிலாப்பூரில் நடைபெற்ற வாழ்த்துக் கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டார்.

சென்னை, நவ. 30—

இலங்கையில் நடைபெற இருக்கும் தமிழ் சொற்போரில் கலந்து கொள்ளப் போகும் சென்னை லயோலா கல்லூரி மாணவர் தோழர் இராமநாதனுக்கு வாழ்த்துக் கூட்டம் ஒன்று நேற்று மாலை மைலாப்பூரிலுள்ள 'மைலாப்பூர் கேப்'பில் நடைபெற்றது. கூட்டத்திற்குத் தோழர் பாரதிதாசன் தலைமை வகித்தார். கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன், நடிகவேள் எம். ஆர். ராதா, லயோலா கல்லூரி தமிழ்ப் பேராசிரியர் வளவன் பாண்டியன், மற்றும் ஆசிரியர்கள், மாணவர்கள் முதலானோர் வாழ்த்துக் கூட்டத்தில கலந்து கொண்டனர்.

தோழர் பாரதிதாசன் அவர்கள் பேசுகையில, "தமிழ் தோன்றியது இலங்கையிலா?" என்பதை ஒட்டியோ, வெட்டியோ தோழர் இராமநாதன் இலங்கையில் சொல்லாற்ற வேண்டிய நிலையிலிருக்கிறார்: இப்பேர்ப்பட்ட வாய்ப்பு தமிழர்களில் ஒருவருக்கு கிடைத்தது, பெருமைபடக் கூடியதாகும். தமிழ் எங்கே தோன்றியது என்பதற்குப் பதில் கூற வேண்டுமாயின், மனிதன் முதலில் எங்கு தோன்றினானோ, எப்போது தோன்றினானோ அங்கேதான் தமிழ் முதலில் தோன்றிற்று எனலாம்.

தமிழிலிருந்துதான், மலையாளமும், கன்னடமும், தெலுங்கும், சிங்களமும் பிறந்தன என்பதை மறுப்போருக்கு நான் என்றும் பதிலுரைக்கத் தயாராக இருக்கிறேன்.

முதலில் தமிழ் எங்கு தோன்றினாலென்ன? இலங்கை வேறு நாடு, தமிழகம் வேறு நாடல்ல; எல்லாம் ஒரே நாடு. இலங்கை நம் வீட்டின் குறடு. நமது நாடு இலங்கையின் தாழ்வாரம்" என்றார்.

கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன் பேசுகையில், தமிழுக்கு ஆபத்து வந்துவிட்டதென்றும், இல்லாவிட்டால், 'தமிழ் வாழ்க' என்று சொல்ல வேண்டிய நிலை ஏற்பட்டிராதென்றும், தோழர் இராமநாதன் ஒருவரால் தமிழை வளர்க்க முடியாதென்றும், ஏராளமான தமிழ் மாணவர்கள் தேவை என்றும் குறிப்பிட்டார்.

இறுதியில் தோழர் இராமநாதன் நன்றி கூற தேனீர் விருந்துடன் கூட்டம் இனிது முடிந்தது. ந. கி

டிச. 14ந் தேதி 'பட்ஜட்' சமர்ப்பணம்

சென்னை, நவ. 28—

அக்டோபர் முதல் மார்ச் முடிய ஆறு மாதத்திற்கான சென்னை அரசாங்கத்தின் வரவு-செலவு கணக்கு திட்டம், டிசம்பர் 14ம் தேதி அசெம்பிளியில் சமர்ப்பிக்கப்படும்.

டிசம்பர் 17, 19ந் தேதிகளில் பட்ஜட் மீது விவாதம் நடைபெறும். 21ம் தேதி முதல், 24ம் தேதி வரை மான்யக் கோரிக்கைகள்மீது ஓட்டெடுக்கப்படும். பின்பு நிதி மசோதா 26ம் தேதி விவாதிக்கப்படும் 28ம் தேதி 'பட்ஜெட்' மேல் சபையில் சமர்ப்பிக்கப்படும். 30, 31-ம் தேதிகளில் விவாதம் நடைபெறும். ஜனவரி 2-ம் தேதி மேல் சபையில் நிதி மசோதா விவாதிக்கப்படும்.

கருணாநிதி நிகழ்ச்சிகள்

★

டிச.	2 : வாணியம்பாடி	14 : விருதுநகர்
	5 : கோவை	18 : பேராவூரணி
	6 : தஞ்சை	20 : மாயவரம்
	8 : திருமாகாளம்	27 : சென்னை, இராயப்பேட்டை
	10 : சிதம்பரம்	28 : செங்கற்பட்டு
	13 : மதுரை	

கல்லக்குடி அறப்போர்

★

இன்று

140-வது நாள்

மூன்றாவது இடம்!

சென்னை, நவ. 28—

புகையிலை உற்பத்தியில் உலகிலேயே இந்தியாவுக்கு மூன்றாவது இடம் இருந்து வருகிறது. இந்தியப்புகையிலையை அதிகமாக வாங்கும் நாடு பிரிட்டனே.

1952—53ல், பிரிட்டன் 3,35,00,000 ராத்தல் புகையிலையை வாங்கியுள்ளது. இதன் மதிப்பு, ரூ. 7,05,00,000.

சிகரெட் ரக புகையிலையை குண்டூர், மைசூர், ஐதராபாத ஆகிய இடங்களில் தான் உற்பத்தி செய்யப்படுகிறது.

பாகிஸ்தானில் அமெரிக்க முதலீடு!

ஆனால், உறுதிமொழி வேண்டுமாம்!

சிட்டகாங், நவ. 28—

"பாகிஸ்தானின் பொருளாதாரத்தை பலப்படுத்த அமெரிக்கா உதவி செய்யத் தயார்; ஆனால், தேசிய மயமாக்கப்பட்டு விடுமோ என்ற பீதி இருந்தே வருகிறது; இந்த பீதி நீங்க, சர்க்கார் உறுதிமொழி கொடுத்தால், முதலீடு செய்வது அதிகரிக்கும்," என்று, பாகிஸ்தானிலுள்ள அமெரிக்க ஸ்தானிகர் கூறியுள்ளார்.

கர்நூலில் குரங்குகள் தொல்லை

கர்நூல், நவ. 27—

கர்நூல் ரெவினியூ செக்ரடேரியட்டில, நேற்று திடீரென்று குரங்குகள் வேலை செய்ய ஆரம்பித்துவிட்டன. வானரங்கள், பேப்பர்களுக்கு ஸ்டாம்பு ஒட்ட ஆரம்பித்தன. பின்பு, குரங்குகள், பைலகளில் கை வைக்கத் தொடங்கின. பியூன்கள் துரத்தவே அவைகள் ஓடிப்போயின.

குரங்குகள் டெலிபோனையும் பயன்படுத்தத் தொடங்கிவிட்டன.

பி. ஜி. கேர் விலகுவார்?

லண்டன், நவ. 28—

லண்டனில் இந்திய ஹைகமிஷனராக உள்ள பி. ஜி. கேர், இன்னும் உடல் நிலை குணமிருப்பதால், அவர், அநேகமாக பதவியிலிருந்து விலகிவிடலாம் என்ற வதந்தி பலமாக இருந்து வருகிறது.

மீண்டும் கிருஷ்ண மேனனே ஹைகமிஷனர் பதவிக்கு நியமிக்கப்படலாம் என்றும் சொல்லப்படுகிறது.

[எகிப்தில், இந்திய ஸ்தானிகராக உள்ள சர்தார் பணிக்கரின் பெயரும் அடிபடுகிறது.]

காப்பி விலை குறைகிறது

பெங்களூர், நவ. 27—

காப்பியின அடிப்படை விலையை டிசம்பர் 1-ம் தேதி முதல், அந்தருக்கு சுமார் ரூ 15 குறைக்க இந்திய காப்பி போர்டு முடிவு செய்திருப்பதாகத் தெரிகிறது.

தூத்துக்குடி சதி வழக்கு நிதி வசூல்

★

முன் (28—11—53 இதழ்) தொடர்ச்சி	5061—5—10
திருச்சூர் அனுதாபி ஒருவர்	10—0—0
தஞ்சை மாவட்ட தி.மு. கழகச் செயலாளர் கே.கே. நீலமேகம் அவர்கள் மூலம் வசூல் :—	
கே கே. நீலமேகம்	5—0—0
கே. பி. பாண்டியநாடார்	5—0—0
பி. என். ஆறுமுகம்	5—0—0
எஸ். பெரியசாமி	5—0—0
பி. முருகைபன்	5—0—0
என் எஸ். கோவிந்தசாமி	5—0—0
ஏ. சிங்காரவேலு	5—0—0
கே. எம். பி பி குப்புசாமி	5—0—0
செல்வா ஜி. சாரங்கபாணி செட்டியார்	5—0—0
சி. நடராசன்	5—0—0
ஏ ஆர். கனகசபை	1—0—0
ஆர். பெருமாள்	1—0—0
கலியபெருமாள்	1—0—0
தர்மலிங்கம்	1—0—0
பி. சோமசுந்தரம்	1—0—0
ஏ. சந்தானம்	1—0—0
என். மகாலிங்கம்	1—0—0
கே. ஏ. சாமிநாதன்	1—0—0
இரா. சேதுராமன்	1—0—0
ரா. பாலசுப்ரமணியன்	1—0—0
திராவிடத்தங்கம்	1—0—0
வளவர்குடில் இளைஞர்கள்	5-12—0
கோ. கன்னையன்	1—0—0
வே. சிவப்பிரகாசம்	1—0—0
த கோவிந்தராசன்	1—0—0
ஏ. ஜெகநாதன்	1—0—0
கே. ஆனந்தம்	1—0—0
பி. எம். என் நடராச நாடார்	1—0—0
சையது இப்ராகிம	1—0—0
கே பி. ஆர். எஸ். தீனதயாளன்	1—0—0
முகம்மதலி	1—0—0
ஏ. அய்யாகண்ணு, ஜோசப்	1—0—0
பி. நடராசன்	1—0—0
எஸ். ராதா—வகாப்	1—0—0
ஆர். சீனிவாசன்	1—0—0
என். என் அனந்தாச்சாரி	2—0—0
ஏ. ராமு	2—0—0
கோ. சாமிநாதன்	1—0—0
பொ. ஆறுமுகம்	1—0—0
எஸ். மாணிக்கம்	1—0—0
என் தியாகராசன்	1—0—0
சி. திருவேங்கடம்	1—0—0
என், எம். ராவ்	1—0—0
எம் முருகேசன்	1—0—0
நடராசன் (மாத்தி)	1—0—0
கே. சிங்காரம்	1—0—0
கே. எல். சவுந்திரராசன்	1—0—0
கே. சந்தானம்	1—0—0
வி. பி. ரங்கநாதன்	1—0—0
கே. ஆர். சுந்தரம்பிள்ளை	1—0—0
வி ஜி. குப்புசாமி	1—0—0
கோ சாமிநாதபத்தர்	1—0—0
வி. ஏ. சுல்தான்	1—0—0
அ. தி. ஜமீபாலம் ராவுத்தர்	1—0—0
க. நா. ராஜாங்கம்	1—0—0
ஆர். ராஜாராமன, பி. ஆர். ராதா கிருஷ்ணன்	1—0—0
டி. ராமலிங்கம்	1—0—0
பி. சாமிநாதன்	1—0—0
எஸ். ஆர். ராதாகிருஷ்ணன்	1—0—0
ஏ சோமசுந்தர பத்தர்	1—0—0
உண்டியல் வசூல்	4—8—6
மதுரை பி. சீனிவாசகம்	1—0—0
ஆனைமலை எ. ஜி. வெங்கிடகிருஷ்ணன்	5—0—0
,, எ. வி. நாராயணசாமி	1—0—0
,, ந. வெங்கடராஜ்	1—0—0
,, டி. ஞானம்	1—0—0
,, எ. எல். ராமலிங்கம்	1—0—0
,, எ. எஸ். வேணு	1—0—0
,, எ. என். சுப்பராயன்	1—0—0
,, வெ. குப்புசாமி	1—0—0
,, அரிராம், சுப்ரமணியம், ரங்கசாமி கண்ணன், நஞ்சப்பன், பத்மநாபன், சின்னு, சுப்ரமணியம், அமீத், ஆறுமுகம், சாமிநாதன், முத்தலீப், ஒருஅனுதாபிஆகியோர்	5—5—0
,, ஆர். தங்கம்	1—0—0

பட்டமுடையான்புரம் நா.ச இளங்கோ	3—0—0
,, நா. மு முத்து	2—0—0
,, நா. ஞா. அறிவழகன்	2—0—0
,, ம. நயசிமுத்து	1—0—0
அ. கொல்லப்பட்டி புதூர் தி மு கழகம் கோபால்	8—0—0
மதுரை வடக்குமாசித் தெரு மறுமலர்ச்சி கழகம் எல் கே. சுப்ரமணியன்	8—0—0
திருத்துறைப்பூண்டி தி. மு. கழகம் ஷேக் உசேன்	6—4—0
விருதுநகர் அ க. ப. சு. மனோகரன்	1—0—0
சென்னை-4. என். வேலன்	1—0—0
சென்னை தியாகராயர் கல்லூரி சி. பி. நல்லமுத்து	1—8—0
கலியாணசுந்தரம், பார்த்தசாரதி, விஜயசிம்மா ரெட்டி, சண்முகம், பூச்சக்கரவர்த்தி	1—8—0
சென்னை கொத்தவால் சாவடி கடைத் தொழிலாளர்கள்	6—0—0
வடசென்னை 21 க. ரு. சிவராமன்	1—0—0
,, மகாலிங்கம்	1—0—0
,, சுப்ரமணியம்	1—0—0
,, என். ஆறுமுகம்	1—0—0
,, எஸ். கே. மொகிதீன்	1—0—0
,, ஆ. செ. ஆறுமுகசாமி	1—0—0
,, கடவுள் தவ்வன்	1—0—0
,, சண்முகம், முத்தையா, சீனிவாசன, பிரகலாதன், கிருஷ்ணன் ஆகியோர்	2—8—0
தோழர் என. எஸ். இளங்கோ அவர்கள் மூலம் :—	
புதுப்பாளையம் தி மு. கழகப் பொதுக் கூட்ட வசூல்	4—6—0
ராசிபுரம் டி. பத்மநாபன்	2—0—0
காட்டேர் ஆர். கந்தசாமி	1—0—0
கிருஷ்ணகிரி தி மு. கழகப் பொதுக் கூட்ட வசூல்	5—3—9
போளூர் தி. மு. கழகம் கே. சுப்ரமணியம் மூலம்	25—0—0
சென்னை 9—வட்டம் ஏழு கிணறு தி. மு. கழகம் 22—11—53-ம்தேதி, நேஷனல் பிக்சர்சார் அன்பளிப்பான 'பராசக்தி'ப் படக் காட்சி மூலம் வசூல்	300—0—0
ஈரோடு எஸ்.அப்பாவு அவர்கள் மூலம்.-	
கே. ஆறுமுகம்	2—8—0
எஸ். அப்பாவு	2—8—0
பி டி. பெருமாள்	2—8—0
இரா. பெருமாள்	2—8—0
எம். பி முத்து	2—8—0
எம். சின்னப்பன்	2—8—0
அ நாகப்பன்	2—8—0
பி. சி. சாமி	1—0—0
இ என். முத்துசாமி	1—0—0
கே. தெய்வநாயகம்	1—0—0
அ. வீ நாகப்பன	1—0—0
எஸ். தாமரைச்செல்வன், த. ஆறுமுகம், எஸ். ராமகிருஷ்ணன், ஈ. தணிகாசலம், முகமது இப்ராகிம, நடராசன, சின்னராசன், சுப்ரமணியம், ஒரு அன்பர், வெங்கடராயர், ஆண்டருன, தேவராசன, கோவிந்தராசன, செனனியப்பன், ராமச்சந்திரன, வெங்கடராம், மணி, மணியம், ஜப்பார், மதார்சா, ஆறுமுகம், சொக்கலிங்கம், நடராசன், கிருஷ்ணன், தங்கராஜ், கணேசன், முத்துசாமி, மகமதலி, சாமியப்பன, சாமி, சலம், சுப்ரமணியம, பரமசிவம், சந்தியாகு, இப்ராகிம்கான், காசிம், சணமுகம், பழனிச்சாமி, பெருமாள், ஏ. பி. பாபு, ஒரு அனுதாபி, சுப்ரமணியம், வரதராசன், பொன்னுசாமி, மாணிக்கம், தாயுமானவன், குதுஸ், ரஜாக், ராசன், ஜப்பார், அனீபா, ஜெலால்தீன, மாணிக்கம், தாவுது, சததார், கபூர், கலிபுல்லா, காளியண்ணன், ராமசாமி, கிருஷ்ணன், மாணிக்கம் முதலியோர்	17-14—6
வடசென்னை கே. எம். சிதம்பரம்	1—0—0
ஆகமொத்தம் ரு.	5630—11—7

சென்னை சிறைக் கதவுகள் திறந்தன

(முதல் பக்கத் தொடர்ச்சி)

பணசாமி, எஸ். எஸ். ராஜேந்திரன், அரங்கண்ணல், சா. அப்பாதுரை, கோ. இறைமுடிமணி, தென்னரசு, நீலமேகம், முல்லை சத்தி, பராங்குசம், வி. முனுசாமி, எஸ்.எஸ். பி.லிங்கம், தோழியர் அலமேலு அப்பாதுரை, செல்லக்கண்ணம்மாள், தோழர்கள் பார்த்தசாரதி, முகவை ஆர். எஸ், பாண்டியன், ஈரோடு எஸ். அப்பாவு, ஈ. வி. கே. செல்வம், கோவை ராசமாணிக்கம், தில்லை-வில்லாளன், பாலகுருசாமி, ஆவுடயப்பன் இன்னும் ஏராளமான தோழர்களும் சிறை வாயிலில் குழுமியிருந்தனர். (வந்திருந்த மற்ற முக்கியத் தோழர்களின் பெயர் நாளை வெளிவரும்.)

தலைவர்களுக்கு காஞ்சியில் வரவேற்பு

★

1—12—53-ல், காஞ்சி கண்ணன் டாக்கீஸ் மைதானத்தில் தோழர் ஏ. கோவிந்தசாமி அவர்கள் தலைமையில், பொதுச் செயலாளர் அண்ணாதுரை, தோழர்கள் நெடுஞ்செழியன், சம்பத், நடராசன் ஆகியோருக்கு வரவேற்பளிக்கப்படும். மாவட்டத் தோழர்கள் அனைவரும் கலந்துகொள்ள வேண்டுகிறோம்.

கருணாநிதிக்கு...

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

அதுபோது அவர்கள் குறிப்பிட்டதாவது :

"பேச, எழுத மட்டுமல்ல; கருணாநிதிக்கு செயலாற்றவும் தெரியும்; சிறை செல்லவும் தெரியும்" என்றும், "'வெள்ளம் போல் தமிழர் கூட்டம்' என்று பாரதிதாசன் பாடியதை, இன்று இவ்வரவேற்பில, காண்கிறோம்" என்றும், "தோழர் கருணாநிதி, மாணவர் உலகுக்கு, தித்திக்கும கரும்பு—ஆடி வரும் தென்றல்—ஓடி வரும் நிலா" என்றும், "தி. மு. க. என்றால் கருணாநிதி—கருணாநிதி என்றால் தி. மு. க." என்றும், "தாயைப் பழித்தால் நாம் தாங்கமாட்டோம; அது போல, திராவிடத் தாயின அவமானச் சின்னமான டால்மியாபுரத்தை மாற்றி, கல்லக்குடியாக்கி — தாயகத்தின் தன்மானத்தைக் காக்கப் புறப்பட்டு வெற்றி கண்ட தோழர் கருணாநிதி வாழ்க!" என்றும் குறிப்பிட்டனர்.

பின்னர், சென்னை மாவட்ட தி. மு. க. கிளைகள், மன்றங்கள், படிப்பகங்கள் அனைத்தின் சார்பிலும், பிற மாவட்டங்கள் சார்பிலும, தோழர் கருணாநிதிக்கு, கைத்தறித் துணிகளும, மலர் மாலைகளும், வாழ்த்திதழ்களும் அளிக்கப்பட்டன.

தோழர் மு. கருணாநிதி அனைவருக்கும் நன்றி தெரிவித்துப் பேசுகையில், குறிப்பிட்டதாவது:

"நான் தற்கொலை செய்து கொள்ள தண்டவாளத்தின்மீது படுத்தேன் என்று, ஆளவந்தார் குற்றஞ் சாட்டினர்.

பல மேடைகளிலே நாம், 'டால்மியாபுரத்தை, கல்லக்குடியாக்கு', என்றோம்-அரசாங்கத்துக்கு நமது குரல் கேட்கவில்லை; எனவே, தண்டவாளத்தில் படுத்த என்மீது ரயில் வண்டி ஏற, என் எலும்புகள் 'கிரீச்' என்று முறிய அந்தக் குரலாவது அரசியலாருக்குக் கேட்காதா, என்பதற்காகத்தான் படுத்தேன்" என்றார்.

மேலும் அவர், தொடர்ந்து பேசுகையில், கல்லக்குடியில் நடைபெற்ற துப்பாக்கிப் பிரயோகம்—தூத்துக்குடி சதி வழக்கு பற்றியும், கம்யூனிஸ்டுகளின் அரோகத்தை விளக்கியும், காங்கிரசாரின் கொடுமைகளையும் கண்டித்தார்.

குறுக்கிட்டார்!

சென்னை, நவ. 30—நேற்று, எழும்பூரில் தோழர் மு. கருணாநிதியை வரவேற்று நடைபெற்ற ஊர்வலம், மவுண்ட் ரோட் வழியாகச் செல்லும் போது, அமெரிக்க உப ஜனாதிபதி நிக்சன் குறுக்கிடவேண்டியதாயிற்று!

மாபெரும் ஊர்வலமாக இருந்ததால், நிக்சன் அவர்கள, பல நிமிட நேரம் தாமதித்தே, ஊர்வலத்தைக் கடந்து செல்லவேண்டியதாயிற்று,

கழகக் கூட்டங்கள்

★

பறங்கிப்பேட்டை

2—12—53 புதன் மாலை

பேச்சாளர்கள் :

ஏ. கோவிந்தசாமி, எம்.எல்.ஏ. தில்லை—வில்லாளன்

வ. ஆ. மாவட்ட செயற்குழு கூட்டம்

அவசர அழைப்பிதழ்

2—12—53 பகல் 2மணிக்கு, மாவட்ட செயற்குழு கூட்டம் நடைபெறும். இதனையே அழைப்பாக ஏற்று கிளைக் கழக செயலாளர்களும், மாவட்ட பிரதிநிதிகளும் கலந்து கொள்ள வேண்டுகின்றேன்.

பொருள் :— (1) தலைவர்களுக்கு மாவட்டத்தின் சார்பிலும், கிளைக் கழகத்தின் சார்பிலும் வரவேற்பு ஏற்பாடு ;

(2) தூத்துக்குடி வழக்குக்கு நிதி தருவது. என்று, செயலாளர் ஏ எஸ். சி. கிருட்டிணசாமி அறிவிக்கிறார்.

கூடும் இடம் :—

வாணியம்பாடி, நியூ எக்ஸ்டென்ஷன்.

தோழர்கள் கருணாநிதி முல்லை-சத்தி

வரவேற்பும்—பாராட்டும்

★

கல்லக்குடி அறப்போராட்டத் தலைவர் மு. கருணாநிதிக்கும், தோழர் முல்லை-சத்திக்கும் டிசம்பர் 2, 3, தேதிகளில் முறையே வாணியம்பாடி, ஜோலார்பேட்டை, திருப்பத்தூர், நிமியம்பட்டு, முல்லைக்கொம்மை ஆகிய ஊர்களில் பாராட்டும் வரவேற்பும் நடைபெறும்.

தோழர்கள் இராம-அரங்கண்ணல், கண்ணதாசன், அம்பில் தர்மலிங்கம், எம். எஸ். மணி, போளூர் சுப்ரமணியம் ஆகியோர் அக்கூட்டங்களில் கலந்து கொள்வர்.

★

கோவையில்

5-12-53 காலை 7-30 மணிக்கு இரயில் நிலையத்திலிருந்து ஒரு மாபெரும் ஊர்வலம் புறப்படும். மாலை 6 மணிக்கு சிதம்பரம் பூங்காவில் பொதுக்கூட்டம் நடைபெறும். மாவட்டத் தோழர்கள் அனைவரும் கிளைக் கழகக் கொடிகளுடன், ஊர்வலத்திலும், பொதுக் கூட்டத்திலும் கலந்துகொள்ள கேட்டுக்கொள்கிறேன், என்று, கோவை மாவட்டத் துணைச் செயலாளர் கோவை செழியன் அறிவிக்கிறார்.

திருமணம்

24—11—53 காலை குன்னியம்பாளையம் மணமகள் இல்லத்தில் தோழர் வில்லவன் கோதைக்கும், தோழியர் இலக்குமிக்கும் சி. பி. சிற்றரசு தலைமையில் சிறப்புற திருமணம் நடந்தேறியது. திருமணத்தின் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரு. 2 அன்பளிப்பு அளிக்கப்பட்டது—வரப்பெற்றோம். — நன்றியுடையது—பொறுப்பாளர்.

“எதிரி தி. மு. க. உறுப்பினர் என்று சொல்ல முடியாது”

—— (:) ——

போலீஸ் ஏவலர் கருப்பையா வழக்கில் சாட்சியின் வாக்குமூலம்

“1946-ம் ஆண்டு நான் தனியாகத் தையல் கடை வைத்தேன். கருப்பையா சிறுவனாக இருந்தபோது ராயல் ஸ்டோரில் சிறிதுகாலம் வேலை பார்த்தார். பாண்டியும் அங்கு வேலை பார்த்தார். நான் தனியாகக் கடை வைத்தபின்னர் என்னுடைய கடைக்கு அவர் அடிக்கடி வருவார். காசிநாதன் என்ற பையன் என் கடையில் வேலை பார்த்துக்கொண்டிருந்தான். அவனிடம் வந்து பாண்டி பேசிக்கொண்டிருப்பார். எங்களுடன் சிநேகமாகவே பாண்டி இருப்பார். எங்களுக்குள் நேரடியான வருத்தம் கிடையாது.”

“பாண்டி என்ற பெயரில் பலர் இருக்கலாம். நான் புகார் செய்த போது பாண்டியன் சாதி, தொழில் ஆகியவைகளைப் பற்றிக் கூறவில்லை.”

“எதிரி திராவிட முன்னேற்றக் கழகத்தின் உறுப்பினரா என்பதை சரியாகச் சொல்ல முடியாது.”

“ஆனால் அவர் அக்கட்சிக்காகப் போர்டுகள் கட்டுவார் என்பது தெரியும். நான் திராவிட முன்னேற்றக் கழகக் கூட்டங்களுக்குச் செல்வது கிடையாது. எதிரியும் அக்கூட்டங்களுக்குப் போவார் என்று சொல்ல முடியாது”

“எதிரி, தி. மு. கழகப் போர்டுகளைக் கட்டுவார் என்பதை நான் நேரில் பார்க்கவில்லை; சொல்லத்தான் கேள்வி,”

என்று, கருப்பையா கொலை வழக்கில், அரசாங்கத் தரப்பு முதலாவது சாட்சியாக விசாரிக்கப்பட்ட எம். ஓ. கந்தன், எதிர்தரப்பு வழக்கறிஞரால் குறுக்கு விசாரணை செய்யப்பட்டபோது கூறினார்.

மதுரை, நவ. 30—

மதுரை எம். ஓ. கருப்பையா கொலை வழக்கு சம்பந்தமாக தோழர் பாண்டி என்பவர் மீது போலீசாரால் தொடரப்பட்டுள்ள வழக்கு, 26—11—53-ல், தாலூகா மாஜிஸ்திரேட் திரு. சி. இராமநாதன் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது, கொலையுண்ட கருப்பையாவின் சகோதரரும், எதிரிகளால், வெட்டப்பட்டவர் என்று கூறப்படுபவருமான எம். ஓ. கந்தன், இன்று அரசாங்க தரப்பில் முதலாவது சாட்சியாக விசாரிக்கப்பட்டார்.

அரசாங்கத் தரப்பு வழக்கறிஞரான திரு. தாமஸ் செல்லையா தாசன் கேட்ட கேள்விகளுக்குப் பதிலளிக்கையில், ‘காந்திஜியின் கட்டளைப்படி நான் சத்தியமாகச் சொல்லுகிறேன்,’ என்று கூறிவிட்டு, அவர் மேலும் கூறியதாவது:—

“தெற்கு வெளிவீதியில் உள்ள சாஜாத் தோப்பில் நான் வசித்துக்கொண்டு வருகிறேன். எனக்கு மேலமாசி வீதியில் தையல் கடை இருக்கிறது. கருப்பையா என்னுடைய சகோதரர். எனக்கு உதவியாக தியாகராசன் என்ற சிறுவன் கடையில் வேலை செய்து வருகிறான். எதிரி பாசிய பாண்டி எனக்கு 10 ஆண்டுகளாகத் தெரியும். ராயல் ஸ்டோரில் நான் வேலை பார்க்கும் சமயம் அவரும் என்னுடன் வேலை பார்த்தார். நான் தற்சமயம் மேல மாசி வீதியில் சொந்தமாகத் தையல் கடை வைத்திருக்கிறேன். அக்கடைக்குப் பாண்டி அடிக்கடி வந்து போவார் எனவே, அவரை எனக்கு நன்கு தெரியும்.

கடந்த 5—10—53-ம் தேதி மாலை ஆறு மணிக்கு நான் கடையில் இருந்தேன். என்னுடன் கருப்பையா, தியாகராசன், ஆகியோரும் இருந்தார்கள். நான் துணிகளை வெட்டிக்கொண்டிருந்தேன். கருப்பையா மிஷினில் உட்கார்ந்து தைத்துக்கொண்டிருந்தான். அந்த நேரத்தில் மழை பெய்துகொண்டிருந்தது. தெருவில் தண்ணீர் நிறைய ஓடிக்கொண்டிருந்தது. கடையில் விளக்குப் போட்டிருந்தேன். அதுபோது பாண்டியும், மற்றும் மூன்று பேர்களும் திடீரென்று அரிவாளுடன் வந்தார்கள். பாண்டி முதலில் என் கையில் அரிவாளால் வெட்டினார். நான் சத்தம் போட்டேன். பின்னர் கடையை விட்டிறங்கி அடுத்துள்ள கார் செட்டில் போய் ஒளிந்தேன் இவர்கள், கடைக்குள் இருந்த கருப்பையாவையும், வெட்டினார்கள்; தங்கவேல் தடுத்தார்; அவரையும் வெட்டினார்கள். யார், யாரெல்லாம் அப்படி வெட்டினார்கள் என்று சரியாகச் சொல்ல முடியாது. தங்கவேலுவை, பாண்டிதான் வெட்டினார். வெட்டுவாங்கிக்கொண்டு தங்கவேலுவும் கார் செட்டிற்கு ஓடி வந்தார், கருப்பையா காக்கா தோப்பு தெருப் பக்கமாக ஓடினார். அவரைப் பாண்டியும், மற்றவர்களும் மேலும் வெட்டினார்கள்.

நாங்கள் கார் செட்டிலிருந்து சத்தம் போட்டோம். சிறிது நேரத்தில் போலீஸ் லாரி வந்தது. எங்களை லாரியில் ஏற்றிக் கொண்டார்கள் கருப்பையாவும் லாரியில் ஏற்றிக்கொண்டார்கள். எனக்கு வலது, இடது கைகள், தோள் பட்டை ஆகிய இடங்களில் பலமான வெட்டுக்காயம் ஏற்பட்டுள்ளது. வைத்திய சாலையில் வாக்குமூலம் கொடுத்தேன் கைகளில் வெட்டப்பட்டிருந்ததால் அதில் நான் கையெழுத்து போடவில்லை. கருப்பையாவும், தங்கவேலுவும் தனித்தனியாக வாக்குமூலம் கொடுத்தார்கள்.

எதிரி, திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்; அக்கட்சியில் ஊழியம் செய்து வருபவர். நான காங்கிரசக் கட்சியில் இருக்கிறேன். கருப்பையா இளைஞர் காங்கிரசு உறுப்பினராகவும், 12-வது வார்டு காங்கிரசக் கட்சி உறுப்பினராகவும் இருந்தார்.

கருப்பையா மேடைகளில் பாடல்களைப் பாடுவார்; அந்தப் பாட்டுகள், திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பற்றிக் குறை கூறும் தன்மையில் இருக்கும்; இதனால்; தி. மு. கழகத்தினருக்கும் கருப்பையாவுக்கும் மனவருத்தம். என்னுடைய தம்பி கருப்பையாவுக்கு 19 வயது இருக்கும்; கல்யாணம் ஆகவில்லை.

இச்சம்பவம் நடைபெறுவதற்கு முன்பு, இளைஞர் காங்கிரசும், திராவிட முன்னேற்றக் கழகத்தினரும் மாறி மாறித் தாக்கிப் பேசிக்கொண்டு வந்தனர்.

எதிரிகள் என்னைக் கழுத்தில் வெட்டியதன் மூலம், எங்களைக் கொலை செய்ய வேண்டும் என்ற நோக்குடனேயே வெட்டினார்கள். நான் 25 நாட்கள் வைத்தியசாலையில் இருந்தேன் கருப்பையா எட்டு நாட்கள் இருந்து இறந்து போனார். கட்சியைத் தவிர வேறு எந்தவிதமான பகையும் கிடையாது கடையில் நேருபடம் வைத்திருந்தேன்

சம்பவம் நடைபெற்ற நாளில் சாட்சி அணிந்திருந்த உடைகளைக் கோர்ட்டில் அடையாளம் காண்பித்தார்.

“தாங்கள் முதலில் கூறிப் பிட்டபடி, காந்திஜி கட்டளைப் படியே நடந்தவற்றை உள்ளபடி, கூறவேண்டும்,” என்று எதிர் தரப்பு வழக்கறிஞரான தோழர் தர்மராஜ் சந்தோஷம் கேட்டுக் கொண்டு, சாட்சியைக் குறுக்கு விசாரணை செய்தார்:

குறுக்கு விசாரணையின்போது சாட்சியான கந்தன் மேலும் குறிப்பிட்டதாவது.

“நான எந்த இயக்கத்திலும் சிறை சென்றது கிடையாது; என்னுடைய வீட்டிற்கும், கடைக்கும் எவ்வளவு தூரம் இருக்குமென்று சரியாகச் சொல்ல முடியாது. காலையில் கடைக்கு வருவேன்; இரவில் வீட்டிற்குப் போவேன். நடந்துதான் செல்வது வழக்கம. பூக்காரச் சந்தைத் தாண்டித்தான் என்னுடைய வீட்டிற்குச் செல்லவேண்டும். எதிரியின் தகப்பனார் பஸ்ஸில் வேலை பார்க்கிறார் என்று தெரியும்.”

“இச் செய்கைக்கு முன்னால் எதிரி வடக்கு மாசி வீதியில் மிட்டாய் கம்பெனியில் வேலை பார்த்தாரா என்று என்னால் சொல்ல முடியாது. கடைக்காரத் தெருவில் உள்ள பாண்டி நாயுடு என்பவரைத் தெரியாது.”

“எதிரிக்குக் குஷ்டம் இருப்பது பிறகுதான் தெரிந்து கொண்டேன். எதிரியின வீடு தெரியும்; கூரை வீடா, அல்லது கெட்டிச் சுவர் கொண்ட வீடா என்பதை என்னால் நிச்சயமாகச் சொல்ல முடியாது எதிரிக்குத் தம்பி, தங்கை உண்டா என்பது தெரியாது. தங்கவேலு தைக்கக் கொடுத்த சட்டையை வாங்க வந்தார். என்னை வெட்ட வந்தவர்களில் நான்கு பேர்கள், அரிவாளுடன் இருந்தார்கள் என்பதை நிச்சயமாகச் சொல்ல முடியும்.”

“கருப்பையா கடையில் இருக்கும் போது ஒரு வெட்டு விழுந்தது; அப்புறம் அவன ஓடும் போதும் வெட்டினார்கள். எதிரிகள் கருப்பையாவையும், தங்கவேலுவையும் வெட்டுகையில் நான பார்த்தேன். இதை இன்ஸ்பெக்டரிடம் நான் சொல்லவில்லை. என்னை வெட்டிய இடம் நெருங்கிய கடைகளும், வீடுகளும் கொண்ட தெருவுதான் எதிரிகள் எங்களை வெட்டும்போது கார் செட்டிலிருந்த ஒருவர், எதிரிகளைக் கம்பால் ஓங்கினார்; எதிரிகள் ஓடிவிட்டார்கள். என்னைப் பாண்டி மட்டும்தான் வெட்டினார். எதிரியைத் தவிர மற்றவர்களின் தோற்றம், நிறம், வயது ஆகியவற்றைச் சொல்ல முடியாது. அதற்கு முன்பு அவர்களைப் பார்த்ததுமில்லை.

“பாண்டி அவர்கள் கூட வந்ததால்தான், அவர்களும் தி மு. கழகமாக இருப்பார்கள் என்று சொல்லுகிறேன்.”

வைத்தியசாலையில் இருக்கும் போது போலீசார் கொண்டு வந்து காண்பித்தவர்களை என்னால் அடையாளம் காண்பிக்க முடியவில்லை. பாண்டி, பொதுவுடைமைக் கட்சியின் கொடியேற்று விழாவில் கலந்துகொண்டதை நான் பார்த்ததில்லை. காங்கிரஸ் காரர்களின் அழைப்பின் பேரில் போலீஸ் லாரி வரவில்லை; தற்செயலாகவே வந்தது.

“போலீசார் வந்தபோது, எதிரிகளை நான் பார்த்ததாகச் சொல்லவில்லை. பாண்டிதான் வெட்டினார். நான் எதிரிகளை எதிர்த்துத் தாக்க முயலவில்லை. எதிரிகள் கம்பு, வேல் கம்புகள் கொண்டு வரவில்லை.

“மாஜிஸ்திரேட்டிடம் பாண்டிதான் வெட்டினான் என்று சொல்லவில்லை.”

வெட்டப்பட்டு வைத்தியசாலையில இருந்த மூன்று நாட்கள் சென்றபின் எதிரியை நான் அடையாளம் காண்பித்தேன்.

கருப்பையாவும், தங்கவேலுவும் வெட்டப்பட்ட சம்பவத்தை மாஜிஸ்திரேட்டிடத்தில் நான் சொல்லவில்லை; என்னை மட்டும் கேட்டதால்தான் நான் சொல்லவில்லை.

அரசாங்கத் தரப்பில் வழக்கறிஞர் திரு தாமஸ் செல்லையா தாசன், தென சரகம் போலீசு இன்ஸ்பெக்டர் திரு. ராஜலிங்கம், வட சரகம் போலீசு இன்ஸ்பெக்டர் திரு ஜெகன்னாதன், போலீசு சப்-இன்ஸ்பெக்டர் திரு. கௌஸ் மைதீன் ஆகியோரும்,

எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர்கள திரு. தர்மராஜ் சந்தோஷம், வி. ராஜையா, ஆர். சொக்கலிங்கம் ஆகியோரும் வாதாடினர்.

வழக்கு விசாரணை டிச 9-ம் தேதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

சிறைச்சோலையில் பூத்த மலர்கள்!

திராவிடப் பண்ணை தரும் தேன் விருந்து!

★

தமிழன்னைக்குக் கலைஞர் சூட்டும் தங்க மகுடம்

★

மு. கருணாநிதி தீட்டிய

மூன்று சித்திரங்கள்

★

★ இரத்தக் கண்ணீர்

★ ஆறு மாதக் கடுங்காவல்

★ முத்தாரம்

திராவிடப் பண்ணை, தெப்பக்குளம், திருச்சி.

தலைநகர் தகராறு: கர்நூலில் ரயில் நிறுத்தம்

——[o]——

நகரில் தடை உத்தரவு அமல்

கர்நூல், நவ 27—

ஆந்திர முதலமைச்சர் பிரகாசம் இன்று சட்டசபையில் பேசுகையில், தலைநகர் சம்பந்தமாக ஒரு வாக்குறுதி யளித்தார்; இன்னும் மூன்றாண்டு காலத்திற்குள் விசால ஆந்திரப் பிரச்னை தீர்ந்து, ஐதராபாத் நிரந்தரத் தலைநகராகி விட்டால், குண்டூர் அல்லது விஜயவாடா, அல்லது வால்டேர் ஆகிய இடங்களில் எங்கு வேண்டுமானாலும் நிரந்தரத் தலை நகரை ஏற்படுத்தத் தாம் சர்க்கார் நடவடிக்கை எடுத்துக் கொள்ளும் என்றார்

ஆனால், விவாதத்தின்போது, மற்றைய கட்சிக்காரர்கள், பிரகாசத்தின் யோசனையை ஏற்கவில்லை.

தலைநகர் பிரச்னை காரணமாக ஆந்திர சட்டசபைமுன் ஆர்ப்பாட்டங்கள் நடைபெறுகின்றன. கர்நூலுக்குக் கொண்டு வரப்பட்ட ஆங்கிலம், தெலுங்கு பத்திரிகைகள் கொளுத்தப்பட்டன

மாணவர்கள் வகுப்புக்குச் செல்லாமல் நகரில் கோஷ்டியாகச் சுற்றி வருகின்றனர்.

கர்நூலில் இன்றிரவு முதல் இன்னும் ஒரு வாரத்திற்கு நான்கு பேருக்கு மேல் கூடக் கூடாது என்றும், ஊர்வலங்கள், ஆர்ப்பாட்டங்கள் நடத்தக்கூடாதென்றும், 144 பிரிவின்கீழ் தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது.

நகர் முழுவதிலும் குறிப்பாக சட்டசபையினர் தங்கும் ‘ஆண்டல்’ பகுதியிலும் தீவிர பந்தோபஸ்து போடப்பட்டிருக்கிறது.

அதிகாரிகளுடன் ஆயுதம் தாங்கிய போலீசார் நகரில் சுற்றி வருகிறார்கள்.

கர்நூலை மாற்றக்கூடாது என்ற ஆர்ப்பாட்டக்காரர்கள் (பெரும்பாலும் மாணவர்கள்) இன்று பல இரயில்களை நிறுத்தி, பார்சல்களை வீசி எறிந்ததாக ரயில்வே அதிகாரிகளுக்குத் தகவல்கள் வந்துள்ளன.

பம்பாய் — மதராஸ் எக்ஸ்பிரஸ், கிருஷ்ணாபுரத்துக்கும், கடப்பைக்குமிடையில், 80 நிமிடத்துக்கு மேல் நிறுத்தப்பட்டது. சென்னையிலிருந்து சென்ற பம்பாய் எக்ஸ்பிரசும் அதே மாதிரி ஆர்ப்பாட்டக்காரர்களால் நிறுத்தப்பட்டது.

ஹப்ளி—விஜயவாடா பாசஞ்சர் இரயில்களும், நந்தியாலில் 2 மணி நேரத்துக்குமேல் நிறுத்தப்பட்டன ஆர்ப்பாட்டக்காரர்கள் ‘பிரேக் வான்’களுக்குள் புகுந்து பல பார்சல்களை வெளியில தூக்கி வீசிவிட்டனர்.

துரோணாசலம் — கர்நூல் பாசஞ்சர், துரோணாசலம் ஸ்டேஷன் வெளி சிக்னலுக்கு அப்பால் நிறுத்தப்பட்டது. ரயிலைத் திருப்பி, பிளாட்பாரத்துக்குக் கொண்டுபோக வேண்டியதாயிற்று.

இந்தியாவில் பென்சிலின் தயாரிப்பு

ஜினிவா, நவ. 28—

இந்தியாவில் பென்சிலின் தயாரிப்பு ஆரம்பமாகிவிட்டது. அடுத்த ஆண்டில் விநியோகத்திற்குக் கிடைக்கும் என்றும், ஒரு ஆண்டில் தயாரிக்கப்படும் பென்சிலின. 18,75,000 ‘ஸிபிலிஸ்’ நோய்களைக் குணப்படுத்தும் அளவுக்கு வரும் என்றும் உலக சுகாதார ஸ்தாபனக் குறிப்பு கூறுகிறது.

கட்டிடம், சர்வீஸ், பயிற்சி இவைகளுக்கான செலவை எல்லாம் இந்திய சர்க்கார் ஏற்கிறது.

பூனாவிலுள்ள இத்தொழிற்சாலை லக்ஷக்கோடி யூனிட்டுகளை உற்பத்தி செய்யக்கூடியது. தென்கிழக்கு ஆசியாவிலேயே இதுதான முதலாவதாகும்.

திராவிட முன்னேற்றக் கழகக் [illegible] தோழர் இரா. செழியன், எம். ஏ., அவர்களால், [illegible] அச்சகத்தில் அச்சிடப்பெற்று (திருச்சி [illegible]) வெளியிடப்பெறுகிறது. [illegible]